RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023- 2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-77 | 23 மார்ச் | ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## சென்னை மாநகராட்சிக்கு தரவேண்டிய ரூ.350 கோடியை மத்திய அரசு தரவில்லை: மேயர் பிரியா குற்றச்சாட்டு

சென்னை, மார்ச்.23



சென்னை மாநகராட்சி மாமன்றத்தில் மார்ச் 19ம் தேதி ரூ.8,405 கோடிக் கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இதன் மீதான விவாதம் ரிப்பன் மாளிகையில் உள்ள மாமன்றக் கூடத்தில் மேயர் ஆர்.பிரியா தலைமையில், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன் ஆகியோர் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கவுன்சிலர்களுக்கான வார்டு மேம்பாட்டு நிதியை ரூ.50 லட்சத்திலிருந்து ரூ.60 லட்சமாக உயர்த்தி அறிவிக்கப்பட்டது உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை பெரும்பாலான கவுன்சிலர்கள் வரவேற்று பேசினர். பாஜக கவுன்சிலர் உமா ஆனந்த் பேசும்போது, சொத்து வரியை உயர்த்தியும் பற்றாக்குறை பட்ஜெட் போட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அதற்கு பதில் அளித்த மேயர் பிரியா, “ஆண்டுதோறும் சொத்து வரி 6 சதவீதம் உயர்த்தினால் நிதி வழங்குவதாக மத்திய அரசு தெரிவித்தது. ஆனால் ரூ.350 கோடி வழங்கவில்லை. அதை பெற்றுத்தர வேண்டும்” என்றார். இறுதியில் பட்ஜெட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

முதல்வர் மருந்தகம்: கடந்த ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வார்டு உறுப்பினர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த பராமரிப்பு தொகை ரூ.10 லட்சம் ஏப்.1ம் தேதி முதல் வழங்கப்படும் என மேயர் அறிவித்தார். மாநகராட்சிக்கு சொந்தமான 65 இடங்களில் முதல்வர் மருந்தகங்களை டியுசிஎஸ் கூட்டுறவு சங்கம் மூலம் தொடங்க மாநகராட்சி அனுமதி அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழகத்தைச் சேர்ந்த பிரபல கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஷ்வின், உலகின் தலைசிறந்த ஆல்ரவுண்டர்களில் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டவர். அவர் பெயரை சென்னை சாலை ஒன்றுக்கு வைக்க மாநகராட்சி சார்பில் திட்டமிடப்பட்டிருந்தது.

அதன்படி, கோடம்பாக்கம் மண்டலம், 134வது வார்டு, ராமகிருஷ்ணாபுரம் 1வது தெருவுக்கு ‘ரவிச்சந்திரன் அஸ்வின் சாலை’ என பெயரிட, அரசின் அனுமதி பெற்ற பின்னர், மாநகராட்சி அனுமதி அளித்து தீர்மானம் நிறை வேற்றியுள்ளது. இக்கூட்டத்தில் மொத்தம் 97 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தொகுதி மறுவரையறை தொடர்பாக பிரச்சினை இருப்பதாக கற்பனை நாடகம் அண்ணாமலை சாடல்

சென்னை, மார்ச்.23



“தொகுதி மறுவரையறை தொடர்பாக பிரச்சினை இருப்பதாக கற்பனை செய்து கொண்டு நீங்கள் நடத்தும் நாடகம் தொடரட்டும். அதோடு கூட்டத்துக்கு வந்துள்ள அண்டை மாநில முதல்வர்களுடன் தமிழக உரிமைகள் பற்றியும் பேசுங்கள்.” என்று தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

நியாயமான தொகுதி மறுவரையறை கோரி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தைக் கண்டித்து, மாநில உரிமைகளை தமிழக முதல்வர் பேண வலியுறுத்தியும் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை சென்னையில் கருப்புக் கொடி போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதுவரை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 4 முறை கேரளா சென்றுள்ளார் அவர் ஒருமுறையாவது மாநில உரிமைகளப் பற்றி பேசியிருக்கிறாரா?. பகிரங்கமாக மேகேதாட்டு விவகாரத்தில் சவால் விடுத்த டிகே சிவகுமார் இன்று சென்னை வந்துள்ளார். அவரிடம் அவ்விவகாரம் பற்றி முதல்வர் ஸ்டாலின் இன்று பேசுவாரா?

தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவது பற்றி ஸ்டாலின் தொடர்ந்து பொய் பேசி வருகிறார் முதல்வர். தெலங்கானாவில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தியுள்ளனர். ஆனால் தமிழகத்தில் அதை நடத்த மத்திய அரசின் ஒப்புதல் தேவை என்று தொடர்ந்து பொய் பேசி வருகிறார் ஸ்டாலின். தெலங்கானா முதல்வர் இங்கு வந்துள்ளார். அவரது வழியில் ஸ்டாலின் சாதிவாரி கணக்கெடுப்பை தமிழகத்தில் நடத்த உத்தரவிடுவாரா?

இப்படியாக தமிழகத்தின் உரிமைகளைப் பற்றி பேசாமல், தமிழக உரிமைகளைப் பறிக்கும் மாநிலங்களின் முதல்வர்களையே இங்கு வரவழைத்து தேவையற்ற ஒரு கூட்டத்தை ஸ்டாலின் நடத்துகிறார்.

அவர் பிரச்சினை இருப்பதாக கற்பனை செய்துகொண்டு நியாயமான தொகுதி மறுவரையறை வேண்டும் என்று சொல்லி ஆலோசனைக் கூட்டம் என்ற பெயரில் நாடகம் நடத்துகிறார். நாடகத்தை நடத்துட்டும். பஜ்ஜி, பிஸ்கட் எல்லாம் சாப்பிடட்டும். கூடவே தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்டுவது தொடர்பாக ஆலோசனையை மேற்கொள்ளட்டும். இவ்வாறு அண்ணாமலை பேசினார்.

## அப்பாவின் கோட்டாவில் நான் மருத்துவம் படித்தேனா? டென்சனான தமிழிசை சவுந்தரராஜன்

சென்னை, மார்ச்.23



எனது அப்பாவின் கோட்டாவில் நான் மருத்துவம் படித்ததாக ஆர்.எஸ்.பாரதி கூறுகிறார். அப்போது, உதயநிதி எந்த கோட்டாவில் அரசியலுக்கு வந்தார்? என்றுகேள்வி தமிழிசை கேள்வி எழுப்பினார்.

திமுகவினர் நாவை அடக்கி பேச வேண்டும் என தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார். சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள தனியார் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பாஜக மாநில முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் பங்கேற்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திமுக இல்லையென்றால் தமிழகத்தில் யாரும் படித்திருக்க முடியாது என சொல்கிறார்கள். அப்படியென்றால், தமிழக மக்களின் அறிவை அவர்கள் குறைத்து மதிப்பீடுகிறார்களா? எனது அப்பாவின் கோட்டாவில் நான் மருத்துவம் படித்ததாக ஆர்.எஸ்.பாரதி கூறுகிறார்.

அப்போது, உதயநிதி எந்த கோட்டாவில் அரசியலுக்கு வந்தார்? ஆர்.எஸ்.பாரதி ஒருமையில் என்னைப் பற்றி பேசுகிறார். பெண்கள் என்றால் அவர்களுக்கு அவ்வளவு கேவலமாக போய்விட்டதா? திமுகவினர் முதலில் நாவை அடக்கி பேச வேண்டும்.

வடமாநிலத்தவர்கள் யாசகம் எடுக்கிறார்கள். பீடா விற்கிறார்கள் என்கிறார்கள். அவர்களும் ஒரு மாநிலத்தை சார்ந்தவர்கள்தான். இந்திய நாட்டின் சகோதர சகோதரிகள்தான். திமுகவினர், தங்கள் மாநிலத்தை பெருமையாக பேசலாம். அதே நேரத்தில் மற்றொரு மாநிலத்தை குறைத்து பேசக்கூடாது. திமுகவினர் சகோதரத்துவத்துடன் வாழ பழக வேண்டும்.

தொகுதி மறுசீரமைப்பில் தமிழகம் பாதிக்கப்படாது என சொல்கிறோம். ஆனால், தமிழகத்தில் தொகுதி குறையும் என திமுக மீண்டும் மீண்டும் பொய்யை சொல்லி வருகிறது. டாஸ்மாக் கடையில் முதல்வர் ஸ்டாலினின் படத்தை பாஜக மகளிர் அணியினர் ஒட்டி வருகின்றனர்.

இதனால், ஆத்திரம் அடைந்த திமுகவினர், கழிவறையில் பாஜக தலைவர்களின் படங்களை ஒட்டுகிறார்கள். அதனால், நாங்கள் அதைப்பற்றி கவலைப்படவில்லை.

டாஸ்மாக் சென்றால் உடல் நலம் கெடும். அந்த புத்தி திமுகவினருக்கு இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ‘தொகுதி மறுவரையறையை நியாயமாக நடத்த வலியுறுத்துகிறோம்’ முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, மார்ச்.23



‘தொகுதி மறுவரையறையை தமிழகம் எதிர்க்கவில்லை. அதனை நியாயமாக நடத்தவே வலியுறுத்துகிறது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள தலைவர்கள் அதற்கான பரிந்துரைகளை முன்வைக்க வேண்டுகிறேன்’ என்று தொகுதி மறுவரையறை தொடர்பான கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தில் ஆற்றிய வரவேற்புரையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து நடந்த அனைத்துக் கட்சிக் கூட்ட தீர்மானத்தின்படி, ‘கூட்டு நடவடிக்கைக் குழு’ அமைத்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக சென்னையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் தொடங்கி நடைபெற்று வருறுகிறது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள மாநில முதல்வர்கள், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களையும் முதல்வர் ஸ்டாலின் வரவேற்றுப் பேசினார்.

அப்போது முதல்வர் ஸ்டாலின் கூறியதாவது: தொகுதி மறுவரையறையை தமிழகம் எதிர்க்கவில்லை. அதனை நியாயமாக நடத்தவே வலியுறுத்துகிறது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள தலைவர்கள் அதற்கான பரிந்துரைகளை முன்வைக்க வேண்டுகிறேன். மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை என்பதை ஏற்க முடியாது. அவ்வாறு நடந்தால் தமிழகம் 8 முதல் 12 இடங்களை இழக்கும். எண்ணிக்கை தான் அதிகாரம். ஒருவேளை நமக்கான தொகுதிகளை நாம் இழந்தால் சொந்த நாட்டிலேயே அதிகாரமற்றவர்களாக இருக்க நேரிடும்.

பல்வேறு மொழிகள், பண்பாடுகள், உடைகள், வழிபாட்டு நம்பிக்கைகள் உள்ளிட்டவை கொண்டதுதான் இந்தியா. அப்படியிருக்க மாநிலங்கள் சுயாட்சி தன்மையுடன் செயல்பட்டால்தான் இந்தியாவின் உண்மையான கூட்டாட்சி உருவாகும். மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை மூலம் கூட்டாட்சி அமைப்புக்கு சோதனை வந்துள்ளது.

மேலும், மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறை என்பது தென் மாநிலங்களை கடுமையாக பாதிக்கும். காலம் காலமாக பாதுகாக்கப்படும் நமது சமூக நீதி பாதிக்கப்படும். அதனைத் தடுக்க இந்திய ஜனநாயகத்தை காக்க நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோம்.

இவ்விவகாரத்தில், உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் விளக்கம் தெளிவாக இல்லை. குழப்பத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது அதனாலேயே முன் எப்போதும் இல்லாத ஒற்றுமையுடன் தமிழகம் ஒன்றிணைந்துள்ளது. இதே ஒற்றுமையுடன் இந்த அரங்கில் கூடியுள்ள அனைவரும் செயல்பட வேண்டும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

‘அபாயத்தில் இருக்கிறோம்’

தொடர்ந்து பேசிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், “இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள மாநிலங்கள் மக்கள் தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முயற்சிகளை எடுத்துள்ளன. ஆனால் அந்த சாதனைக்காக கவுரவிக்கப்படாமல், அந்த மாநிலங்கள் தங்களின் பிரதிநிதித்துவத்தை இழக்கும் அபாயத்தில் உள்ளன.

பல பத்தாண்டுகளாகவே நாம் மக்கள் தொகையை கட்டுப்படுத்துவதில் பல்வேறு கொள்கைகளை வகுத்து, அதை செயல்படுத்த போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். தேசம் நிலையான மக்கள் தொகை பெருக்கத்தை இலக்காகக் கொண்ட போது அதற்கேற்ப நாம் மாநிலங்களில் மக்கள் தொகையை கட்டுக்குள் வைத்தோம். இன்னும் சில மாநிலங்களில் மக்கள் தொகை பெருக்கம் அதிகமாக உள்ளது. ஆனால் அதைக் கட்டுப்படுத்தி ஒரு சாதனையை நாம் செய்துள்ளோம். அதற்காக இப்போது அரசியல் பிரதிநிதித்துவத்தை இழக்கும் சூழலில் உள்ளோம்.” என்று பேசினார்.

‘சிறப்பாக செயல்பட்டதற்கான தண்டனை’ தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி பேசுகையில், “மக்கள் தொகை கட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களிலும் சிறப்பாக செயல்பட்டதற்கான தண்டனையே இந்த தொகுதி மறுவரையறை. பாஜக நம்மை பேசவே அனுமதிப்பதில்லை. அவர்கள் நினைப்பதை செயல்படுத்துகிறார்கள். கட்சி எல்லைகளைக் கடந்து நாம் இந்த விவகாரத்தில் ஒன்றிணைந்து செயல்படுவோம்.” என்று கூறினார்.

‘தலைக்கு மேல் தொங்கும் கத்தி’ கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன் பேசுகையில், “மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்பே, மத்திய அரசு தொகுதி மறுவரைக்கு அவசரம் காட்டுவது ஏன்? கடந்த முறை நடந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது கேரளாவின் மக்கள் தொகை பெருக்கம் 4 சதவீதமாகத்தான் இருந்தது. இந்த நிலையில், உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசும் விகிதாச்சார அடிப்படையின் அர்த்தம் என்ன?

இந்தத் தொகுதி மறுவரையறை கூட்டாட்சியை மறுக்கிறது. தற்போதைய தொகுதி மறுவரையறை செயல்பாடு வட இந்தியாவுக்கு நன்மைபயக்கும் என்று அறிந்திருப்பதால், மத்திய அரசு இதனை முன்னெடுக்கப் பார்க்கிறது. ஒருபுறம் மக்கள் தொகையை சிறப்பான முறையில் கட்டுப்படுத்தியதற்காக தென்மாநிலங்களை மத்திய அரசு பாராட்டுகிறது. ஆனால் மறுபுரம் மக்கள் தொகை குறைவாக இருப்பதைக் காரணம் காட்டி நமது பங்கினை குறைக்கிறது. தொகுதி மறுவரையறை என்பது நம் தலைக்கு மேல் தொங்கும் கத்தியாகும். எந்த ஒரு ஆலோசனையும் நடத்தாமல் பாஜக தொகுதி மறுவரையறையை முன்னெடுக்கிறது.” என்றார்.

பெயர்ப் பலகைகளில் தாய்மொழி ஆலோசனைக் கூட்டத்துக்கு வருகை தந்துள்ள அனைவரின் முன்னால் வைக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகைகளிலும் அவர்களது பெயர் ஆங்கிலத்திலும், அவரவர் தாய்மொழியிலும் பெயர்ப் பலகை வைக்கப்பட்டிருந்தது. அதேபோல் முதல்வர் ஸ்டாலினின் வரவேற்புரையை கூட்டத்தில் பங்கேற்றோர் அவரவர் தாய்மொழியில் கேட்கும் வகையிலும் ஏற்பாடு செய்யபப்ட்டிருந்தது.

காஞ்சிப் பட்டு முதல் கோவில்பட்டி கடலை மிட்டாய் வரை.. இன்றைய ஆலோசனைக் கூட்டத்துக்கு வருகை தந்துள்ள மூன்று மாநில முதல்வர்கள், கர்நாடக துணை முதல்வர், பிற அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்டோருக்கு புவிசார் குறியீடு பெற்ற தமிழகத்தின் காஞ்சிபுரம் பட்டுச் சேலை, பத்தமடை பாய், தோடர்கள் ஷால்வை, கன்னியாகுமரி கிராம்பு, கோவில்பட்டி கடலை மிட்டாய், ஊட்டி வர்க்கி, ஈரோடு மஞ்சள் மற்று கொடைக்கானல் பூண்டு ஆகியன அடங்கிய பரிசுப் பெட்டகம் வழங்கப்பட்டது.

‘வரலாற்றில் பொறிக்கப்படும்’

முன்னதாக, ஆலோசனைக் கூட்டத்துக்கு வருகை தந்த முதல்வர்கள், அரசியல் கட்சித் தலைவர்களை வரவேற்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில், “நமது நாட்டின் வளர்ச்சிக்கு பங்களித்த மாநிலங்கள் நியாயமான தொகுதி மறுசீரமைப்பை உறுதி செய்வதன் மூலம் அதன் கூட்டாட்சி கட்டமைப்பைப் பாதுகாக்க ஒன்றிணைந்த நாள் இது. இன்றைய தினம் வரலாற்றில் பொறிக்கப்படும்.” என்று குறிப்பிட்டிருந்தார்.

## தமிழக கர்நாடக எல்லையில் இருமாநில போலீஸ் பாதுகாப்புடன் பேருந்துகள் இயக்கம்

ஒசூர், மார்ச்.23





மராட்டிய மொழி பேசவில்லை என நடத்துநரை தாக்கியதைக் கண்டித்தும், காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டுவில் அணைக்கட்ட எதிர்க்கும் தமிழக அரசை கண்டித்தும் கன்னட அமைப்பினர் கர்நாடகவில் இன்று முழு கடை அடைப்பு அறித்துள்ளதால் இரு மாநில போலீஸார் பாதுகாப்புடன் தமிழக பேருந்துகள் வழக்கம் போல் இயக்கப்பட்டு வருகிறது.

கர்நாடக மாநிலம் பெலகாவியில் கடந்த பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதி மராட்டிய மொழி பேசவில்லை எனக் கூறி கர்நாடக மாநில அரசு பேருந்து நடத்துநரை அங்குள்ள மராட்டிய அமைப்பினர் தாக்கினர். இதற்கு கர்நாடக மாநிலத்தில் கடும் எதிர்ப்பு எழுந்ததுடன் கன்னட அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன. மேலும் கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களுக்கு இடையே இது மொழி பிரச்சினையாக உருவெடுத்து உள்ளது.

இந்நிலையில், கர்நாடக மாநிலம் முழுவதும் இன்று முழு அடைப்பிற்கு அங்குள்ள கன்னட அமைப்பினர் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதேபோல காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டு அணை கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தமிழகத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாகவும் இந்த முழு அடைப்பு நடைபெறும் என கன்னட அமைப்பினர் அறிவித்திருந்தனர்.

இதன் காரணமாக பேருந்துகள், ஆட்டோக்கள் ஓடாது என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் கர்நாடக மாநில அரசு முழு அடைப்பிற்கு ஆதரவு இல்லாத நிலையில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருக்க, அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும் கர்நாடக மாநிலத்தில் இன்று நடைபெற உள்ள அரசு தேர்வுகளும் வழக்கம்போல நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தமிழக கர்நாடக மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து பாதிக்கப்படாமல் இருக்க இரு மாநில போலீஸ் பாதுகாப்புடன் வழக்கம் போல இயக்கப்பட்டு வருவதால், இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படவில்லை. எனினும் தமிழக கர்நாடக மாநில எல்லையான அத்திப்பள்ளியில் இன்று காலை கன்னட அமைப்பினர் சார்பில் தமிழ்நாட்டிற்கு எதிரான முழக்கங்களை எழுப்பியும், காவிரி ஆறு தங்களது என கூறி முழக்கமிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு தமிழக எல்லையை நோக்கி வர முயன்ற சுமார் 20க்கும் மேற்பட்ட கன்னட அமைப்பினரை அம் மாநில போலீஸார் குண்டு கட்டாக கைது செய்தனர்.

முழு அடைப்பு காரணமாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படவில்லை எனினும் பாதுகாப்பு காரணங்கள் கருதி போலீஸார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அதேபோல தமிழக மாநில எல்லைப் பகுதியான ஓசூர் ஜூஜூவாடி பகுதியில் கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை உத்தரவின் பேரில் தமிழக போலீஸாரும் கண்காணிப்பு ஈடுபட்டு வருகின்றனர்



வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த ரத்தினகிரி ஸ்ரீ பாலமுருகனடிமை அறங்காவலர் மெய்ஞானம் பெற்ற நாளில் சாமியிடம் முன்னாள் கவர்னர் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத்தின் முக்கிய பிரதமர் ஆன தமிழிசை சௌந்தர்ராஜன் விழாவில் கலந்து கொண்டு சிறப்பு தரிசனம் பெற்று, ஸ்ரீ பாலமுருகன் வள்ளி தேவயானியின் திருவருள் பெற்றனர். இந்நிகழ்வின்போது இராணிப்பேட்டை மாவட்டம் மற்றும் வேலூர் மாவட்டத்தில் உள்ள பாஜக பிரமுகர்கள் பலர் பங்கேற்றனர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

## வேலூர் இரத்தினகிரி பாலமுருகன் திருக்கோயிலில் பாலமுருகனடிமை சுவாமி மெய்ஞ்ஞான சிறப்பு விழா அன்னதானம்



வேலூர் மார்ச் 23

வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த இரத்தினகிரி ஸ்ரீ பாலமுருகன் திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலர் பாலமுருகனடிமையின் 58ம் மெய்ஞ்ஞானம் பெற்ற சிறப்பு விழா கோயிலில் கோலாகலமாக நடைபெற்றது. காலையில் மலை மீது வீற்றிருக்கும் முருகன், வள்ளி, தெய்வானைக்கு சிறப்பு அபிஷேகம், அலங்கார சிறப்பு பூஜைகள் நடைபெறறது.

பிற்பகல் பக்தர்களுக்கான அன்னதான நிகழ்ச்சியை பாலமுருகன் அடிமை சுவாமி துவக்கி வைத்து உணவை பொதுமக்களுக்கு பரிமாறி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

மயிலம் பொம்மபுரம் ஆதினம் சிவஞான பாலய சுவாமிகள், கலவை சச்சிதானந்த சுவாமிகள் , இராணிப்பேட்டை அதிமுக மேற்கு மாவட்ட செயலாளர் சுகுமார் மற்றும் பலர் பங்கேற்றனர். இவ்விழா ஏற்பாடுகளை மெய்ஞான அன்னதான குழுவினர், செயல் அலுவலர் சங்கர், கோயில் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழக பட்ஜெட் உரையில் 2025-2026ல் சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் புதிய அரசு கல்லூரி அமைக்கப்படும் என தமிழக முதல்வர் ஒப்புதலோடு அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்திருந்த நிலையில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் உத்தரவின் பேரில் மானாமதுரை வட்டாட்சியர் கிருஷ்ணகுமார் தலைமையிலான வருவாய்த்துறையினர் இடம் தேர்வு செய்யும் பணியில் ஈடுபட்டனர். கல்லூரி அமைப்பதற்காக செய்களத்தூர் பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## மானாமதுரை ஆனந்தபுரம் பைபாஸ் பகுதியில் ஊர்கள் அறிவிப்பு பலகை இல்லாததால் வாகன ஓட்டிகள் அவதி

சிவகங்கை, மார்ச்.23



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஆனந்தபுரம் பைபாஸ் பகுதியில் (மதுரை ராமேஸ்வரம்) இரயில்வே கேட் அருகில் நெடுஞ்சாலை துறை சார்பில் ஊர்கள் குறிப்பிடும் அறிவிப்பு பலகை இல்லாததால் வெளியூரில் இருந்து வாகனங்களில் வரும் பயணிகள் குழப்பம் அடைகின்றனர் தற்போது பங்குனி மாதம் தாயமங்கலம் மாரியம்மன் கோவிலில் திருவிழா என்பதால் சுற்றுவட்டார பகுதியில் இருந்து வரும் பொதுமக்கள் ஊர்கள் குறிப்பிடும் அறிவிப்பு பலகை இல்லாததால் குழப்பம் அடைகின்றனர்.

## ஆம்புலன்சில் பிறந்த குழந்தை



தேவகோட்டை, மார்ச்.23

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தாலுகா கண்டியூர் கிராமத்தைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி மனைவி நிறைமாத கர்ப்பிணி கார்த்திகா (27) கண்ணங்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டனர் ,பின்னர் 108 ஆம்புலன்சில் காரைக்குடி சூரக்குடி அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர், செல்லும் வழியில் பெண்ணுக்கு பிரசவ வழி ஏற்பட்டது தச்சவயல் என்ற இடத்தில் அழகான ஆண் குழந்தை பிறந்தது ஓட்டுனர் மருது பாண்டியன்,மருத்துவ உதவியாளர் சங்கீதா உடனிருந்தனர். இந்நிகழ்வை பார்த்த பொதுமக்கள் ஓட்டுநர் மற்றும் செவிலியர்களை பாராட்டி வருகின்றனர்..

## நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு குழு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இயக்கம் இணைந்து விழிப்புணர்வு பேரணி

நன்மங்கலம் மார்ச் 23




நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு குழு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இயக்கம் இணைந்து விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பாக தாம்பரம் மாநகராட்சி உள்ள நன்மங்கலம் ஏரியை சுத்தம் செய்து குப்பைகளை அகற்றி பாதுகாக்க வேண்டும் என்று நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு குழு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இயக்கம் சார்பில் இன்று செம்பாக்கம் சீயோன் பள்ளி வளாகத்தில் காலை 7 மணி அளவில் நன்மங்கலம் பாதுகாப்பு குழு தலைமையில் நடைப்பயணத்தை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி கொடி அசைத்து துவக்கி வைத்தனர்

இதில் புனித தோமையர் மலை ஒன்றிய தலைவர் சங்கீதாபாரதி, நன்மங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் லயன் கிரி, துணைத் தலைவர் கார்த்திகேயன், தன்னார்வலர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், நலசங்கங்கள், நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு ஊர்வலமாக நன்மங்கலம் ஏரி மற்றும் அதனை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதி வழியாக மேளதாளம் முழுக்கத்துடன் ஏரிகளை பாதுகாப்போம் ஏரிகளில் குப்பைகளை கொட்டுவதை தடுத்து நிறுத்துவோம், போன்ற வாசகம் அடங்கிய அட்டைகள் ஏந்தி கொண்டு கோஷங்கள் எழுப்பியவாறு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் சமூக ஆர்வலர் கலந்துகொண்டு ஏரிகளை எப்படி பாதுகாப்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் விழிப்புணர்வு ஊர்வலத்தில் தன்னார்வலர்கள், சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் நன்மங்கலம் பாதுகாப்பு குழு சங்கம் நிர்வாகிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

நன்மங்கலம் ஏரி பாதுகாப்பு குழு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இயக்கம் சார்பில் நன்மங்கலம் ஏறிய பாதாள சாக்கடை திட்டத்தை மற்றும் அதை சுற்றியுள்ள ஏரிகளை பாதுகாக்க வேண்டும் என்று சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்..

## பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நல திட்ட உதவிகள் வழங்கும் விழா

பல்லாவரம் மார்ச் 23



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு பல்லாவரம் ரயில் நிலையம் அருகில் பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியல் பணிகள் கழகத் தலைவர் தலைமை கழக பேச்சாளர் நகைச்சுவை தென்றல் திண்டுக்கல் ஐ லியோனி குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்

இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், பெர்னாட், ஏ.கே. கருணாகரன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ரஞ்சன் மாநிலத் தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் தமிழ் மரம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், வழக்கறிஞர் ராஜாராம், மாணவரணி அமைப்பாளர் எல்.பிரபு, வட்ட கழகச் செயலாளர் டி.வி.ராஜா, ராஜ்குமார், சிவகுமார், சந்திரன், சதீஷ், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜானகிராமன், எழிலரசன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..

## வட மாநில தொழிலாளி படுகொலை ஒடிசா சென்று கொலையாளியை கைது செய்த குன்னூர் போலீசார்

குன்னூர், மார்ச்23

நீலகிரி மாவட்டம் குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலை மரப்பாலம் பகுதியில் தனியார் தேயிலைத் தோட்டத்தில் பணி புரிய ஒடிசா மாநிலத்தில் இருந்து வந்து நரேந்திரன் (42) வீரேந்திரன் ஆகியோர் இருவர் கடந்த ஒரு வாரமாக பணியாற்றி வந்த நிலையில் அவர்களுக்கு தங்குவதற்காக மரப்பாலம் பகுதியில் தோட்ட நிர்வாகம் சார்பாக தங்குவதற்கு வீடு ஒதுக்கப் பட்டிருந்தது இந்நிலையில் பதினெட்டாம் தேதி நரேந்திரன் பணிக்கு வராததால் மேலாளர் வீட்டுக்கு வந்து பார்த்தபோது நரேந்திரன் கழுத்து அறுக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்த மேலாளர் உடனடியாக காவல்துறைக்கு தகவல் கொடுத்தார். இதனை தொடர்ந்து குன்னூர் டிஎஸ்பி ரவி தலைமையில்



இன்ஸ்பெக்டர் சதீஷ் மற்றும் போலீசார் விரைந்து வந்து நரேந்திரனின் உடலையும்,ரத்த கரை படிந்துள்ள அரிவாள் ஆகியவற்றை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர். மேலும் இது தொடர்பாக மாவட்ட எஸ் பி என் எஸ் நிஷா சம்பவ இடத்திற்கு வந்து ஆய்வு மேற்கொண்டு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கி சென்றார். இந்த கொலை தொடர்பாக மோப்ப நாய் வரவழைக்கப்பட்டது. இந்த மோப்பநாய் மரப்பாலத்தில் இருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரம் மலைப்பாதையில் வேகமாக சென்று நின்றுவிட்டது. முன்னதாக எதிரே வரும் வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுமோப்ப நாய்க்கு வாகன ஓட்டிகள் வழி விட்டனர். இச்சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்கு பதிவு செய்து நரேந்திரனின் உடலை பிரேத பரிசோதனைக்காக குன்னூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்நிலையில் வீரேந்திரனை பிடிக்க குன்னூர் டிஎஸ்பி ரவி மேற்பார்வையில் நான்கு தனிப்படைகள் அமைக்கப்பட்டு கோவை, திருப்பூர், ஈரோடு,சென்னை உள்ளிட்ட பகுதிகளில் விசாரணை மேற்கொண்டு வந்தனர். மேலும் இவனது செல்போன் செயல் பாடுகள் குறித்தும் கண்காணிக்கப் பட்டதில் கோவை ரயில் நிலையத்தில்சுவிட்ச் ஆப் செய்தது தெரிய வந்தது. இது மட்டுமல்லாமல் ஒடிசா மாநிலத்தில் உள்ள வீரேந்திரனின் உறவினர்களிடமும் போலீசார் தொலை பேசி மூலம் விசாரணை மேற்கொண்டனர்.

இதில் போலீஸ் எஸ்ஐ குணா தலைமையில் காவலர்கள் ஜாகிர் உசேன்,வினித் பாலாஜி ஆகியோர் அடங்கிய தனிப்படையினர் கடந்த பதினெட்டாம் தேதி ரயில் மூலம் ஒடிசா சென்றனர். அங்குள்ள போலீசார் உதவியுடன் வீரேந்திரனை நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு குன்னூர் போலீசார் கைது செய்தனர். இதனைத் தொடர்ந்து குற்றவாளியாக கருதப்படும் வீரேந்திரன் குன்னூர் கொண்டு வரப்பட்டார். தற்போது போலீசார் விசாரணையில் தான் கொலைக்குண்டான காரணம் தெரிய வரும் என போலீசார் தெரிவித்தனர். இந்த கொலைச் சம்பவம் தொடர்பான கைது செய்யப்பட்ட குற்றவாளியை போலீசார் ஒடிசா சென்று இரண்டு நாளில் கைது செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சிவகங்கை மாவட்டம் முன்னாள் படைவீரர்கள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம்

சிவகங்கை, மார்ச்.23

சிவகங்கை மாவட்டம் முன்னாள் படைவீரர்கள்/ படைப்பணியாற்றுவோர் / சார்ந்தோர்களுக்கான

சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் 25.03.2025 அன்று நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சியர் ஆஷா தகவல் தெரி வித்துள்ளார்.



சிவகங்கை மாவட்ட முன்னாள் படைவீரர்கள் / படைப்பணியாற்றுவோர் / சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்றக் கூடத்தில் (ஞி.ஞி.சி பிணீறீறீல்) வருகின்ற 25.03.2025 செவ்வாய்க்கிழமை அன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் படைவீரர் / படைவீரர் / சார்ந்தோர், வருகின்ற 25.03.2025 அன்று முற்பகல் 10.30 மணியளவில் முன்னாள் படைவீரர் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வருகைபுரிந்து, தங்களது குறைகளை இரட்டை பிரதிகளில் மனுவாக வழங்கி, நிவர்த்தி செய்து பயனடையலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரி வித்துள்ளார்.

## கல்லல் முருகப்பா மேல்நிலை பள்ளியில் உலக நீர் தினம்

கல்லல் மார்ச் 23







சிவகங்கை மாவட்டம் கல்லலில் உலக நீர் தின விழா 1993 ஆம் ஆண்டு முதல் மார்ச் 22 ஆம் நாள் " உலக நீர் தினம் "கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு தொடக்கம் முதலே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மாணவர்களிடம் தண்ணீர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வகையில் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக உலக நீர் தினம் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டப் பொருளாளர் பிரபு " பனிப்பாறைகள் பாதுகாப்பு " என்ற கருப்பொருளில் கருத்துரையாற்றினார். புவி வெப்பமயமாதல், நிலத்தடி நீர்மட்டம், நெகிழிப் பயன்பாடு, வனங்களை அழிப்பது, நீர் பாதுகாப்பு, நீர் சேமிப்பு போன்ற உப தலைப்புகளில் நீரினைப் பற்றியபல அரிய கருத்துக்களை எடுத்துக் கூறினார். ஆசிரியை கற்பகவல்லி பள்ளிகளில் நீர் சிக்கனத்தை கடைபிடிப்பதன் அவசியத்தை எடுத்துக் கூறினார். ஆசிரியை உமாராணி புதைபடிவ பொருள்களால் வாகனங்கள் இயக்குவதை குறைத்து சுற்றுச்சூழலை காக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். தொடர்ந்து பேசிய ஆசிரியை அமுதா மழைநீர் சேகரிப்பின் மகத்துவத்தை விளக்கி கூறினார். நீர் சேமிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றி ஆசிரியர்கள் எழுப்பிய வினாக்களுக்கு சிறந்த முறையில் பதிலளித்த எட்டாம் வகுப்பு மாணவர் புவனேசுக்கு புத்தகம் பரிசாக வழங்கப்பட்டது.

## பல்லாவரத்தில் அறிஞர் அண்ணா கண்டோன்மெண்ட் உயர்நிலைப்பள்ளியில் ஆண்டு விழா



பல்லாவரம் மார்ச் 23

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பல்லாவரத்தில் அறிஞர் அண்ணா கண்டோன்மெண்ட் உயர்நிலைப்பள்ளியில் ஆண்டு விழா தலைமை ஆசிரியர் க.பாஸ்கர் தலைமையில் வெகு விமர்சியாக நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக அறிஞர் அண்ணா கண்டோன்மெண்ட் உயர்நிலைப்பள்ளியின் தாளாளர் டாக்டர் வினோத் விக்னேஸ்வரன், பசுமை தாயகம் மாநில துணை செயலாளர் அரிமா ஜ.நா.கண்ணன், பல்லாவரம் கன்டோன்மென்ட் வாரியம் செயிண்ட் தாமஸ் மவுண்ட் உறுப்பினர் பி.ஏ.குணா, பள்ளி கல்வித்துறை திருவளர் செல்வன் ஆகியோர் கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்கள் ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு மாணவர்களின் கலை நிகழ்ச்சியை கண்டு மகிழ்ந்தனர். இதனை தொடந்து விழாவில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கும் பதக்கங்களும் விருதுகளையும் வழங்கி பாராட்டினார்கள் மேலும் பள்ளியின் தலைமை ஆசிரியர் நினைவு பரிசினை வழங்கி வாழ்த்து தெரி வித்தார். ஆண்டு விழாவை இதில் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட ஏராளமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

## தேனி நாடார் சரசுவதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமுதசுரபி தமிழ் இலக்கியமன்ற விழா;

பெரியகுளம் மார்ச்23





தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடபுதுபட்டியில் தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 24 ஆம் ஆண்டு அமுதசுரபி தமிழ் இலக்கியமன்ற விழா கர்மவீரர் காமராஜர் கலையரங்கில் நடைபெற்றது.

கல்லூரி செயலாளர் காசிபிரபு வரவேற்புரை ஆற்றினார். கரூர் மாவட்ட முன்னாள் ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன துணை முதல்வர் சேதுபதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.மேலும் அவர் பேசும் போது "இளைய தலைமுறையான மாணவியர்கள் தமிழுக்கு தொண்டு செய்ய வேண்டும். தமிழையே முதல் மொழியாக கொள்ள வேண்டும்.

நேர்மையுடன் கூடிய நன்னடத்தையே மாணவிகளை உயர்வான நிலைக்கு எடுத்துச் செல்லும். அமுதசுரபி என்பது எல்லாவற்றையும் குறைவில்லாமல் வழங்கும் தெய்வீக பாத்திரமாக கருதப்படுகிறது. இதுபோல, தமிழ் அறிவு, இலக்கியம் மற்றும் பண்பாட்டுப் பொருட்களைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டே இருக்கிறது. கல்வி பெற்ற பெண்கள் தொழில் முனைவோராகவும், சுயதொழில் முனைவோராகவும் மாறி, தங்களது குடும்பங்களை மட்டுமின்றி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்த முடியும். அவர்கள் சிறு தொழில்கள் தொடங்கி, சமூகத்தில் வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கக் கூடியவர்களாக மாறலாம் " என்று பேசினார். இந்நிகழ்ச்சியில் தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை தலைவர் ராஜமோகன், உப தலைவர் கணேஷ், பொதுச் செயலாளர் ஆனந்தவேல், பொருளாளர் பழனியப்பன், கல்லூரி பேராசிரியைகள், மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் முனைவர் தேவகி நன்றியுறை ஆற்றினார்.

## பெரியகுளம் அருகே கும்பக்கரை அருவியில் வனத்துறை சார்பில் உலக வன தின தூய்மை பணி





பெரியகுளம் மார்ச்.23

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள தேவதானப்பட்டி வனசரகத்திற்கு உட்பட்ட கும்பக்கரை அருவியில் உலக வன தினத்தை முன்னிட்டு மாவட்ட வன அலுவலர் யோகேஷ்குமார் மீனா உத்தரவின் பேரில் தேவதானப்பட்டி வன அலுவலர் அன்பழகன் தலைமையிலும், வனவர் ஞானம் முன்னிலையிலும் கும்பக்கரை பகுதிகளில் வனத்தை பாதுகாக்கும் வகையில் ஆங்காங்கே உள்ள குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை கல்லூரி மாணவிகள் அகற்றி வனத்தை பாதுகாக்கும் வண்ணமாக சுத்தம் செய்தனர். பின்பு கும்பக்கரை அருவிக்கு வருகை தந்துள்ள சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறை சார்பில் உலக வன நாளை முன்னிட்டு வனத்தை எப்படி பாதுகாக்க வேண்டுமென்று நாம் கொண்டுவரும் பொருட்களை கண்ட இடங்களில் போடக்கூடாது, வனப்பகுதிகளில் பிளாஸ்டிக்குகள் மற்றும் குப்பைகள் போடுவதை தவிர்க்க வேண்டும் நமது வீட்டை சுத்தமாக வைத்து கொள்வது மாதிரி வனத்தையும், சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று வனத்துறையினர் அறிவுறுத்தினர். இந்த நிகழ்ச்சியில் நேரு யுவகேந்திரா தேனி மாவட்ட நிகழ்ச்சி ஒருங் கணைப்பாளர் கோகுலகிருஷ்ணன், திரவியம் கல்லூரி நாட்டுநலப்பணி திட்ட அலுவலர் முத்துலட்சுமி, நாட்டு நலப்பணி திட்ட உதவி அலுவலர்கள் அழகன், திருமுருகன், கல்லூரி மாணவிகள், வன ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்..

## கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி, கூட்டுறவு கல்வி நிதி வழங்கல்

நீலகிரி மார்ச் 23




நீலகிரி மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பாக அரவேணு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் செயல் எல்லையில் அமைந்துள்ள கொனவக்கரை கிராமத்தில் 21.03.2025 அன்று உறுப்பினர் கல்வி திட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு நீலகிரி மண்டல இணைப்பதிவாளர் இரா. தயாளன் தலைமை தாங்கினார். தனது தலைமையுரையில் உலகவிய மற்றும் இந்திய கூட்டுறவு இயக்க வரலாறு குறித்தும், நீலகிரி கூட்டுறவு இயக்கத்தின் தந்தை ராவ்பகதூர் பி. ஙி. ஆரிகவுடர் நீலகிரி மக்களுக்கு ஆற்றிய பல்வேறு விதமான சேவைகள் குறித்தும் உறுப்பினர்களிடையே விரிவாக எடுத்துத்தரைத்தார். இந்நிகழ்ச்சிக்கு நீலகிரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, துணை ப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர்

சி.அய்யனார் முன்னிலை வகித்தார். தனது முன்னிலையுரையில் கூட்டுறவு நிறுவன தயாரிப்பு பொருட்கள் குறித்தும், முதல்வர் மருந்தகம் குறித்தும், அதன் மூலம் ஏழை எளிய நடுத்தர வர்கத்தை சேர்ந்த மக்கள் பெறும் பயன்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். கட்டபெட்டு தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை செயலாட்சியர் அருள்செல்வம் தனது வாழ்த்துரையில் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையின் மூலமாக உறுப்பினர்களுக்கு அரசால் வழங்கப்படும் பல்வேறு விதமான மானியம் குறித்து எடுத்துரைத்தார். பின்னர் கொனவக்கரை கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் முதன்மை அமைப்பாளர் திரு. போஜன் பேசுகையில் புதிதாக அமைக்கப்பட உள்ள சங்கத்தின் மூலமாக இப்பகுதி மக்கள் சமூக பொருளாதார மேம்பாட்டு அடைவார்கள் எனவும் அதற்கு காரணமாகவும், சங்கம் அமைத்திட ஆலோசனை வழங்கி வழிநடத்தும் மண்டல இணைப்பதிவாளர் அவர்களுக்கு ஊர் பொது மக்கள் சார்பாக நன்றி தெரிவித்தார். உறுப்பினர் கல்வித் திட்டத்தின் முக்கிய நிகழ்வாக அரவேணு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் 202223 நிதி ஆண்டிற்கான நிகர இலாபத்தில், சட்டபூர்வ நிதிகளான கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி, கூட்டுறவு கல்வி நிதிக்கான காசோலையினை மண்டல இணைப்பதிவாளரிடம் சங்கத்தின் செயலாளர் திருமதி. நிஷா வழங்கினார். பின்னர் கொனவக்கரை கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள கட்டிடத்தினை மண்டல இணைப்பதிவாளர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்கினார். முன்னதாக ஆசிரியர் ராஜூ வரவேற்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் கொனவக்கரை ஊர் தலைவர் பெள்ளி கவுடர், மத்திய கூட்டுறவு வங்கி மேலாளர், சங்கத்தின் உறுப்பினர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் இறுதியில் சங்கத்தின் செயலாட்சியர்/ கூட்டுறவு சார்பதிவாளர் சுப்ரமணி நன்றியுரை கூறினார்.

## தேசிய பசுமைப்படை சிவகங்கை பள்ளி மாணவர்களுக்கு இயற்கை முகாம் ஏற்பாடு







சிவகங்கை மார்ச் 23

சிவகங்கை மாவட்டத்திலுள்ள பள்ளிகளிலிருந்து தேசிய பசுமை படை சார்பாக சுற்றுச்சூழலில் ஆர்வம் உள்ளவர்களுக்கான இயற்கை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. இயற்கை முகாமிற்கு சிலுக்கப்பட்டி கோவிலூர் பீர்க்கலைக்காடு

ஓ.சிறுவயல் உஞ்சனை இலுப்பக்குடி அமராவதிபுதூர் புளியால் கீழக்கோட்டை காரைக்குடியில் உள்ள அரசு அரசு உதவிபெறும் பள்ளிகளிலுள்ள 50மாணவர்கள் பங்குகொண்டனர். முதல்நாள் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள வடுவூர் பறவைகள் சரணாலயம் வேதாரண்யம் உப்பளம் கோடியக்கரை கலங்கரை விளக்கம் உயிரியல் பன்மயப் பூங்கா இயற்கை முகாம் ஏற்பாடு*

தேசியபசுமைப்படை சார்பாக சிவகங்கை மாவட்டத்திலுள்ள பள்ளிகளிலிருந்து சுற்றுச்சூழலில் ஆர்வம் உள்ளவர்களுக்கான இயற்கை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. முதல்நாள் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள வடுவூர் பறவைகள் சரணாலயம் வேதாரண்யம் உப்பளம் கோடியக்கரை கலங்கரை விளக்கம் உயிரியல் பன்மயப் பூங்கா இரண்டாம் நாள் உதய மார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் முத்துப்பேட்டை அலையாத்தி காடுகள் படகு பயணம் மனோகரா புதுப்பட்டினம் பீச் ஆகிய சுற்றுச்சூழல் சார்ந்த பயணம் மேற்கொள்ளப்பட்டது. தேசிய பசுமைப்படை சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிரிட்டோ இயற்கை முகாம் நிகழ்வுகளை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தார். தேசிய பசுமைப்படை திருவாரூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நடனம் வழிகாட்டினார். தலைமை ஆசிரியர்கள் ராஜேந்திரன் இராமர் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி சமூகவியல் பட்டதாரி ஆசிரியர் ஜெகநாதன் ஆங்கில பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி ஓவிய ஆசிரியர்கள் செல்வம் கணேசன் புகைப்பட கலைஞர் ஜான் ஆகியோர் மாணவர்களை சிறப்பாக வழிநடத்தினர். மாணவர்களுக்கு போர்வை துண்டு ஸ்டீல் தண்ணீர் பாட்டில் டீ சர்ட் தொப்பி வழங்கப்பட்டன. மாணவர்கள் இயற்கை நிகழ்வுகளை கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். சுற்றுச்சூழலை காக்கும் விதமாக அனைவருக்கும் நூல் பையானது வழங்கப்பட்டது. உலக தண்ணீர் தின முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பனிக்கட்டி பாதுகாப்பு குறித்தும் தண்ணீரை மாசு இல்லாமல் பாதுகாப்போம். நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவோம். நீர் ஆதாரத்தை பெருக்குவோம் என்று உலக தண்ணீர் தினத்தில் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

## தேவகோட்டை அருகே பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கிய தொண்டு நிறுவனம்



சிவகங்கை, மார்ச்.23

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையை அடுத்துள்ளது புலியால் . இந்த ஊரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் பெற்றோர் இல்லாத மாணவ , மாணவியர்களுக்கு விடியல் என்னும் தொண்டு நிறுவனத்தின் மூலம் இலவச பள்ளிச் சீருடைகள் வழங்கப்பட்டது பின்பு அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் இலவசமாக எழுது பொருட்கள் , மற்றும் மழைக்கோட்டுகள் வழங்கப்பட்டது . இதில் 100 மாணவ , மாணவிகள் பயன்பட்டனர் . விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தேவகோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் மகேஸ்வரி அவர்கள் பேசும்போது...... மாணவிகளுக்கு ஒரு கருத்தை பதிவு செய்ய விரும்புகிறேன் . குட்.. டச் , மற்றும் பேடு ...டச் என்று உள்ளது . மாணவிகளை யாரேனும் பேடு...டச் அதாவது தவறான நோக்கில் தொட்டால் அவர்கள் நண்பர்கள் மூலமாகவோ அல்லது ஆசிரியர்கள் மூலமாகவோ அல்லது பெற்றோர்கள் மூலமாகவோ காவல் நிலையத்திற்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும் . அப்போதுதான் பாலியல் குற்றங்கள் குறையும் என்று பேசினார் . இதனைத் தொடர்ந்து விடியல் தொண்டு நிறுவனத்தின் இயக்குனர் ஆர்.எம். ரோணிக்கா பேசும்போது மாணவ , மாணவிகள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் தற்போது நகர் பகுதிகளில் போதைப் தொடர்பான பொருட்கள் எளிதாக கிடைக்கிறது . எனவே மாணவர்கள் விழிப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும் என்று பேசினார் . நிகழ்வின் தொடக்கத்தில் பள்ளியின் தலைமை ஆசிரியர் வரவேற்றுப் பேசினார். விழாவின் நிறைவில் விடியல் தொண்டு நிறுவனத்தின் தலைவர் பா.லீமாரோஸ் நன்றி கூறினார் .



திண்டுக்கல் மாவட்டம் பழனியில் பெருமாள் புதூர். ஆண்டிபட்டி புளியம்பட்டி ஆகிய வழித்தடங்களில் மூன்று புதிய பேருந்து சேவையை துவக்கி வைத்தார் பழனி சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் தொடர்ந்து கட்சி நிர்வாகிகளும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



தேனி மாவட்ட பெருந்திட்ட வளாகம் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் உலக வன தினத்தை முன்னிட்டு, வனத்துறையின் சார்பாக முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி சொர்ணம் ஜெ.நடராஜன், மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், ஆகியோர் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா.சிவ பிரகாஷ், , துணை இயக்குநர், மேகமலை புலிகள் சரணாலயம் சி.ஆனந்த், , மாவட்ட வன அலுவலர் ஜெ.ர.சமர்த்தா, உதவி வன அலுவலர் அரவிந்த், ஆகியோர் முன்னிலையில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

## தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பு சார்பில் சிபிஐஎம் அகில இந்திய மாநாடு நிதியளிப்பு பேரவை



மதுரை மார்ச்.23

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24வது மாநாடு மதுரையில் வருகிற ஏப்ரல் 2 முதல் 6 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த மாநாட்டிற்கு தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் மதுரை கிளை சார்பில் நிதியளிப்பு பேரவை வியாழனன்று மதுரை தீடீர் நகரில் உள்ள

பி.ராமமூர்த்தி நினைவகம் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் மாநில துணைப் பொதுச் செயலாளர் வி. பிச்சைராஜன் தலைமை வகித்தார். அமைப்பின் மதுரை கிளை மாவட்டத் தலைவர் ஆர்.மாரிச்சாமி வரவேற்று பேசினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் கே.சாமுவேல்ராஜ், மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் கே.ராஜேந்திரன், ஆகியோர் மாநாட்டின் நோக்கம் குறித்து பேசினார்கள். பேரவையை நிறைவு செய்து வைத்து அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் எஸ்.எஸ். சுப்ரமணியன் பேசினார். மாவட்டச் செயலாளர் ஆர். சர்தார் பாட்சா நன்றி கூறினார். இந்த நிதியளிப்பு பேரவை கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24வது மாநாட்டிற்கு தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் சார்பில் ரூ.50ஆயிரம் ரூபாயை நிதியாக கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் கே. சாமுவேல்ராஜ், கே.ராஜேந்திரன் ஆகியோரிடம் வழங்கினார்கள்.



திண்டுக்கல் மாவட்டம். வேடசந்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் க. இளம்பகவத், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி.இரா.ஐஸ்வர்யா, உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சோழவந்தான் பகுதியில் கிராமப்புற மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கும் தன்னார்வலருக்கு பாராட்டு

சோழவந்தான் மார்ச் 23

மதுரை சுப்பிரமணியபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ஹர்சினி கிஷோர் சிங் இவர் கல்வி மற்றும் தொழில் முனைவோர்கான மேலாண்மை படிப்பை பெங்களூர் ஜெயின் பல்கலைக்கழகத்தில் படித்து முடித்த நிலையில் மதுரையில் பல்வேறு கிராம பகுதிகளில் படிக்கும் கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பத்தில் புதிய தொழில்நுட்ப பயிற்சியை இலவசமாக வழங்கி வருகிறார்

அதாவது கல்வி இன்டர்நெட் பாதுகாப்பு தொழில்நுட்ப வளர்ச்சி செயற்கை நுண்ணறிவு மெய்நிகர் உணர்வு தொழில் முனைவோர் பயிற்சி ஆகியவற்றை கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சி வழங்கி வருகிறார் இதன் தொடர்ச்சியாக



மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே தென்கரை கிராமத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட ஏழை மாணவர்களுக்கு கல்வி இன்டர்நெட் பாதுகாப்பு தொழில் முனைவோர் பயிற்சி ஆகியவற்றை வழங்கினார் ஏற்கனவே அவர் பணியாற்றும் நிறுவனம் கர்நாடகாவில் 10,000ற்கும் மேற்பட்ட மாணவர்களை நேரடியாக பயிற்சி மூலம் பயனடைய செய்துள்ளதாக தெரிவித்தார்

இவரது பயிற்சியை பாராட்டி ரூரல் டெக் ரைஸ் நிறுவனம் டெல்லியில் நடைபெற்ற சி இன்ஸ்பயர் நிறுவனத்திலிருந்து யூத் ஐகான் விருதை கடந்த மார்ச் எட்டாம் தேதி இவருக்கு வழங்கியது குறிப்பிடத்தக்கது அவரது பயிற்சியின் முக்கிய நோக்கம் மொபைல் நூலகம் மெய் நிகர் நுண்ணறிவு தொழில் முனைப்பு பயிற்சி ரோபோடிக்ஸ் பயிற்சி ஆகியவை குறிப்பிடத்தக்க பயிற்சியாக பார்க்கப்படுகிறது

இவரது இந்த முயற்சிக்கு பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பிலிருந்து பாராட்டுக்கள் குவிந்துவருகிறது

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161